Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | } | | |
| Miscellaneous | .. .. | } | | |
| Preliminary Register | .. .. | } | **S.C.** 57/2022 | |
| Sessions | .. .. | } | | |
| | | } | Prosecution | – **PW**4 |
| Deposition of witness for | | } | Defence | – |
| | | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | சுப்பிரமணியன் |
| Father/Husband Name | : | கிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் காட்டுப்பிள்ளையார்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு காவல் துறையில் தொழில்நுட்ப பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சுந்தரம் எனது கடைசி தம்பி ஆவார். எனது தம்பி சுந்தரம் இறப்பதற்கு முன்பு இராமநாதபுரம் காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றிக்கொண்டிருந்தார். எதிரிகள் ராஜ்கபூர், சிவா ஆகியோர்கள் தெரியும். அ.சா.1 இராஜேந்திர பிரசாத்தை தெரியும். கடந்த 06.11.2009 ம் தேதி இரவு 10.20 மணியளவில் எனது அண்ணன் மோகனதாஸ் என்பவர் எங்களுக்கு தம்பி இராமநாதபுரம் அப்துல்லா மருத்துவமனையில் அருகில் உள்ள பரமக்குடி பரோட்டா ஸ்டாலுக்கு அருகில் இறந்துகிடப்பதாக எங்களுக்கு சொன்னார் . உடனே நானும் எனது தாய், தந்தை மற்றும் அண்ணன் ஆகியோர்கள் அனைவரும்

சம்பவ நடந்த இடத்திற்கு சென்றோம். அங்கு என் தம்பி சுந்தரம் பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு முன்பு மூளை சிதறிய நிலையில் இறந்துகிடந்தார். அதன் அருகில் காயம்பட்டு இருந்த இராஜேந்திர பிரசாத்தும் இருந்தார். நான் இராஜேந்திர பிரசாத்திடம் விசாரித்தபோது என் தம்பி சுந்தரமும், இராஜேந்திர பிரசாத்தும் பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு என் தம்பி இருசக்கர வாகனத்தில் சாப்பிடுவதற்காக வந்து பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு முன்பு இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது எதிரி ராஜ்கபூர் என்னடா தேவுடியா மகன்களா மோதுவது போல வண்டியை நிறுத்துகிறீர்கள் என்று சத்தம் போட்டதாகவும் அதற்கு இராஜேந்திர பிரசாத் ஏன் எங்களை இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்ட போது கீழேகிடந்த ரீப்பர் கட்டையால் எதிரி ராஜ்கபூர் இராஜேந்திரபிரசாத்தின் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும் அதைத்தடுத்த என் தம்பி சுந்தரத்தை எதிரி சிவா என்பவர் கீழே தள்ளிவிட்டு எதிரிகள் இருவரும் ரீப்பர் கட்டையால் என் தம்பி சுந்தரத்தின் தலையில் மாறி மாறி தாக்கி கொலை செய்துவிட்டார்கள் என்றும் சொன்னார். எதிரிகள் இராஜேந்திர பிரசாத்தை அடிக்க போகும் போது அவர் ஓடிவிட்டார். சம்பவம் குறித்து இராஜேந்திர பிரசாத் என்பவர் இராமநாதபுரம் பஜார் காவல் நிலையத்தில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்மனு கொடுத்தார். இறந்துகிடந்த என் தம்பியை ஆம்புலன்ஸ் உதவியுடன் போலிசார் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். சம்பவத்தன்று என் தம்பி அணிந்திருந்த ஆடைகள் அழுக்குடன் கூடிய நிலையில் உள்ள லைட்புளு கலர் சட்டையில் வெள்ளைகோடு போட்டது காலரின் பின்புறம் ராயல் கிளாசிக் என்று எழுதப்பட்டுள்ளது **சா.பொ.3.** கிழிந்த நிலையில் உள்ள சிமிண்ட் கலரில் பக்க வாட்டில் கருப்பு வெள்ளை கலரில் பாடர் போடப்பட்ட பனியன் கிளாத் பேன்ட் அதில் டைகர் ஸ்போர்ட்ஸ் என்று எழுதப்பட்டது **சா.பொ.4.** புளுகலர் ஜட்டி அதில் வைக்கிங் என்று எழுதப்பட்டது **சா.பொ.5.** கருப்பு நிற மழைக்கோர்ட்டு சைஸ் XL அதன் குறுக்கே Cup Sports என்று எழுதப்பட்டது **சா.பொ.6.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 57/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosection – **PW**3 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மோகன்தாஸ் |
| Father/Husband Name | : | கிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் காட்டுப்பிள்ளையார்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் அஞ்சல் துறையில் போஸ்ட் மாஸ்டராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சுந்தரம் எனது கடைசி தம்பி ஆவார். எனது தம்பி சுந்தரம் இறப்பதற்கு முன்பு இராமநாதபுரம் காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி கல்லூரியில் விரிவுரையாளராக பணியாற்றிக்கொண்டிருந்தார். எதிரிகள் ராஜ்கபூர், சிவா ஆகியோர்கள் தெரியும். கடந்த 06.11.2009 ம் தேதி இரவு 10.00 மணியளவில் இராமநாதபுரம் அப்துல்லா மருத்துவமனையில் அருகில் உள்ள பரமக்குடி பரோட்டா ஸ்டாலுக்கு என் தம்பி சுந்தரமும், இராஜேந்திர பிரசாத் என்பவரும் என் தம்பியின் இருசக்கர வாகனத்தில் சாப்பிட சென்றார்கள். அன்று இரவு 10.15 மணியளவில் அ.சா.2 சரவணக்குமார் என்பவர் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு என் தம்பி

சுந்தரத்தையும் இராஜேந்திர பிரசாத்தையும் எதிரிகள் ராஜ்கபூர், சிவா ஆகிய இருவரும் ரீப்பர் கட்டையால் தாக்கி என் தம்பி பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு முன்பு இறந்துகிடந்தார் என்றும் அதன் அருகிலேயே இராஜேந்திர பிரசாத் என்பவரும் தலையில் காயத்துடன் நின்று கொண்டிருக்கிறார் என்றும் சொன்னார். உடனே நானும், என் தம்பி சுப்பிரமணியன், எனது அப்பா கிருஷ்ணன், அம்மா வானதி ஆகியோர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தோம். அங்கே என் தம்பி சுந்தரம் தலையில் அடிபட்டு மூளை சிதறி இறந்தநிலையில் கிடந்தார். அருகில் இருந்த இராஜேந்திர பிரசாத்திடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அப்போது எனது தம்பியும் இராஜேந்திர பிரசாத்தும் இருசக்கர வாகனத்தில் பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு எதிராக இருசக்கர வாகனத்தை நிறுத்தியபோது எதிரிகள் இருவரும் என்னடா மோதுவது போல் வருகிறீர்கள் என்று சத்தம் போட்டதாகவும் அதனால் இராஜேந்திரபிரசாத்துக்கும் எதிரி ராஜ்கபூருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு எதிரிகள் இருவரும் ரீப்பர் கட்டையால் என் தம்பி சுந்தரத்தின் தலையில் அடித்து கொலை செய்துவிட்டதாகவும் இராஜேந்திர பிரசாத்தின் தலையில் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும் சொன்னார். சம்பவம் குறித்து காயம்பட்ட இராஜேந்திர பிரசாத் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி பஜார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.** 57/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**2 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சரவணக்குமார் |
| Father/Husband Name | : | சிவமயம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் காட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் மீன்கடையில் வேலை பார்க்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சுந்தரம் என்பவரை தெரியும். அ.சா.1 இராஜேந்திர பிரசாத்தை தெரியும். எதிரிகள் ராஜ்கபூர், சிவா ஆகிய இருவரையும் தெரியும். கடந்த 06.11.2009 ம் தேதி இரவு 10.00 மணியளவில் இராமநாதவும் சிகில் ராஜா வீதியில் உள்ள பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு சென்று சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது வழக்கில் இறந்துபோன சுந்தரம் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு பின்னால் இராஜேந்திர பிரசாத் அமர்ந்து நான் சாப்பிட்டுக்கொண்டிருந்த பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு முன்பு இருசக்கர வாகனத்தை நிறுத்தினார்கள். அருகில் நின்றிருந்த ராஜ்கபூர், சிவா ஆகிய இருவரும் எங்களை பார்த்து என்டா தேவுடியா மகன்களா எங்களை மோதுர மாதிரி

என்டா வண்டியை வந்து நிறுத்துகிறீர்கள் என்று அசிங்கமாக திட்டினார்கள். அதற்கு அ.சா.1 இராஜேந்திர பிரசாத் திட்டிய எதிரிகளை பார்த்து என்டா இப்படி திட்டுகிறீர்கள் என்று கேட்டார். அதனால் அவர்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டது. உடனே ராஜ்கபூர் என்பவர் கீழே கிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து இராஜேந்திரபிரசாத்தின் தலையில் ஓங்கி அடித்தார். இறந்துபோன சுந்தரம் என்பவர் ஏன்டா என் அண்ணனை அடிக்கிறீங்க என்று கேட்டார். அதற்கு எதிரி ராஜ்கபூர் அதே ரீப்பர் கட்டையால் சுந்தரத்தை ஓங்கி கெட்ட வார்த்தையால் திட்டி அடிக்க வந்தார். உடனே இராஜேந்திர பிரசாத் அந்த ரீப்பர் கட்டையை பிடித்தார். அருகில் இருந்த எதிரி சிவா என்பவர் ரீப்பர் கட்டையால் இராஜேந்திர பிரசாத்தை ஓங்கி அடிக்கவே அவர் விலகிவிட்டார். அந்த அடி எதிரி ராஜ்கபூர் மீது பட்டுவிட்டது. அதற்கு பின்பு எதிரி சிவா என்பவர் சுந்தரத்தை கீழே தள்ளிவிட்டு கீழேவிழுந்த சுந்தரத்தை எதிரிகள் இருவரும் தங்கள் கையில் இருந்த ரீப்பர் கட்டையால் மாறி மாறி சுந்தரத்தின் தலையில் அடித்தார்கள். அதைப்பார்த்து இராஜேந்திர பிரசாத் சத்தம் போடவே எதிரிகள் இருவரும் ரீப்பர் கட்டையை கொண்டு இராஜேந்திர பிரசாத்தை அடிக்க ஓடிவரவே இராஜேந்திர பிரசாத் உயிருக்கு பயந்து கொஞ்ச தூரம் ஓடிவிட்டார். எதிரிகள் இருவரும் மஞ்சள் நிறமுள்ள பின்புறம் ஆனந்தா என்று பெயர் எழுதப்பட்ட ஆட்டோவில் தப்பி சென்றுவிட்டனர். பின்பு காயம்பட்டுக்கிடந்த சுந்தரத்தின் அண்ணன் மோகன் என்பவருக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தேன். அதன் பிறகு காயம்பட்டுக்கிடந்த சுந்தரத்தின் அண்ணன்கள் மோகன், சுப்பிரமணி மற்றும் சுந்தரத்தின் அப்பா, அம்மா ஆகியோர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தார்கள். அப்போது சம்பவ இடத்தில் சுந்தரம் மூளை சிதறி இறந்த நிலையில் கிடந்தார். என்னிடம் காட்டப்படும் 3 அடி நீளமுள்ள ரீப்பர் கட்டையை வைத்துத்தான் எதிரி ராஜ்கபூர் தாக்கினார். 1 1/2 நீளமுள்ள ரீப்பர் கட்டையை வைத்துத்தான் எதிரி சிவா சுந்தரத்தையும், இராஜேந்திர பிரசாத்தையும் தாக்கினார். எதிரிகளை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ஆய்வாளர் என்னை இருமுறை விசாரித்தார்.

(எதிரி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் எதிரியை இந்த சாட்சி நேரில் அடையாளபடுத்தவேண்டி எதிரியை அடுத்த வாய்தாவில் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பித்து விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | } | | |
| Miscellaneous | .. .. | } | | |
| Preliminary Register | .. .. | } | **S.C.** 57/2022 | |
| Sessions | .. .. | } | | |
| | | } | Prosecution | – **PW1** |
| Deposition of witness for | | } | Defence | – |
| | | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | இராஜேந்திர பிரசாத் |
| Father/Husband Name | : | கதிரேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.

முதல் விசாரணை–

நான் தற்போது பெருங்களூரில் வசித்து வருகிறேன். நான் சம்பவ நாளான 06.11.2009 ம் வருடம் இராமநாதபுரம் காட்டுப்பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வந்தேன். நான் ஓட்டுநர் வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் திருப்பூரில் பிரிண்டிங் பிரஷ் வைத்திருந்தேன். எனக்கு திருமணம் செய்ய வேண்டி சம்பவ சமயத்தில் இராமநாதபுரம் வந்தேன். இவ்வழக்கில் இறந்துபோன சுந்தரம் எனக்கு தம்பி ஆவார். எதிரிகள் ராஜ்கபூர் (இறப்பு), சிவா ஆகியோர்களை தெரியும். கடந்த 06.11.2009 ம் தேதி இரவு 10.15 மணியளவில் காட்டுப்பிள்ளையார் கோவில் தெருவிலிருந்து இராமநாதபுரம் அப்துல்லா மருத்துவமனை எதிரில் உள்ள பரமக்குடி பரோட்டோ ஸ்டாலுக்கு சாப்பிட நானும், வழக்கில் இறந்துபோன சுந்தரமும் சுந்தரத்தின் CD Don இருசக்கர வாகனத்தில் சென்றோம். அப்போது இறந்துபோன சுந்தரம் இருசக்கர

வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன். அப்போது பரமக்குடி பரோட்டோ ஸ்டாலிற்கு எதிரில் வாகனத்தை இறந்து போன சுந்தரம் நிறுத்தினார். அப்போது பரமக்குடி பரோட்டா ஸ்டாலுக்கு முன்பு நின்று கொண்டிருந்த ராஜ்கபூர், சிவா ஆகிய இருவரும் எங்களை பார்த்து என்டா தேவுடியா மகன்களா எங்களை மோதுர மாதிரி என்டா வண்டியை வந்து நிறுத்துகிறீர்கள் என்று அசிங்கமாக திட்டினார்கள். அதற்கு நாங்கள் ஏன் எங்களை அசிங்கமாக பேசுகிறார் என்று கேட்டபோது ராஜ்கபூர் என்பவர் கீழேகிடந்த ரீப்பர் கட்டையை எடுத்து என் தலையில் ஓங்கி அடித்தார். அதனால் எனக்கு தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அதைப்பார்த்த எனது தம்பி சுந்தரம் என்டா என் அண்ணனை அடிக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ராஜ்கபூர் என்பவர் என் தம்பியை பார்த்து நீ என்னடா கேட்பது என்று சொல்லிக்கொண்டு அதே ரீப்பர் கட்டையை வைத்துக்கொண்டு என் தம்பி சுந்தரத்தை அடிக்க ஓடிவந்தார். அதை நான் தடுத்து மறைத்தேன். அவர் அருகில் இருந்த எதிரி சிவா கீழே இருந்த ரீப்பர் கட்டையை எடுத்துக்கொண்டு என்னை அடிக்க ஓடிவந்தார். நான் விலகவே அந்த அடி ராஜ்கபூர் மீதுபட்டது. பின்பு ராஜ்கபூரும், சிவாவும் ரீப்பர் கட்டையால் என்னை அடிக்கவும் எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. நான் ஓரத்தில் ஒதுங்கி நின்றுவிட்டேன். எதிரி சிவா என்பவர் என் தம்பி சுந்தரத்தை பிடித்து கீழே தள்ளிவிட்டார். கீழேகிடந்த என் தம்பி சுந்தரத்தை ராஜ்கபூரும், சிவாவும் மாறி மாறி ரீப்பர் கட்டையால் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். அப்போது நான் என் தம்பியை அடிக்காதீர்கள் என கத்தினேன். அவர்கள் என்னை அடிக்க ஓடிவரவே நான் கொஞ்சதூரம் ஓடி நின்றுவிட்டேன். அதன் பின்பு எதிரிகள் அங்கிருந்து ஆனந்தா என்று பெயர் எழுதப்பட்டிருந்த ஆட்டோவில் தப்பி சென்றுவிட்டார்கள். காயம்பட்ட என் தம்பியை நான் வந்து பார்க்கவே அவர் மூளை சிதறி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அந்த சமயத்தில் மழைத்தூரல் விழுந்து கொண்டிருந்தது. சோடியம் வெளிச்சத்தில் சம்பவத்தை பார்த்தேன். சம்பவ சமயத்தில் சரவணக்குமார், மணிகண்டன், ராஜ்குமார், முரளி ஆகியோர்கள் ஓடிவந்து காயம்பட்டு கிடந்த சுந்தரத்தை தூக்கிப்பார்த்தபோது அவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி பஜார் காவல் நிலையத்தில் இரவு 11.30 மணிக்கு நான் புகார்மனு கொடுத்தேன். புகார் மனு **அ.சா.ஆ.1.** புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். சம்பவத்தின் போது எதிரி ராஜ்கபூர் 3 1/4 அடி

நீளமுள்ள ரீப்பர் கட்டையை வைத்து தாக்கினார். அந்த ரீப்பர் கட்டை **சா.பொ.1.** எதிரி சிவா 1 1/2 அடி நீளமுள்ள ஆணிபதித்த ரீப்பர் கட்டையை வைத்து சுந்தரத்தின் தலையில் தாக்கினார். அந்த ரீப்பர் கட்டை **சா.பொ.2.** எதிரிகளை நான் நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்த சமயத்தில் பரமக்குடி பரோட்டோ ஸ்டாலில் ஒருசில நபர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

(எதிரி இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் எதிரியை இந்த சாட்சி நேரில் அடையாளபடுத்தவேண்டி எதிரியை அடுத்த வாய்தாவில் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பித்து விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)